

சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (10.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா மற்றும் அவரது சகோதரரும் துணை செயலாளருமான சுதீஷ் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

# முரசொலி செல்வம் மறைவு!

## தொல்.திருமாவளவன் இரங்கல்!



சென்னை, அக். 11-

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்

முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அளித்த பேட்டி வருமாறு:

முரசொலி செல்வம் அவர்களின் மறைவு குறித்து அதிர்ச்சி அடைந்து நேரில் சென்று அஞ்சலி செலுத்தினேன். அவர் சிறந்த எழுத்தாளராக, பத்திரிகையாளராகத் திகழ்ந்தவர். திரை உலகிலும் கால் பதித்து திறமையை வெளிப்படுத்தியவர்.

கலைஞரின் முரசொலியில் கடைசி வரை எழுதி தன் முத்திரையை பதித்தவர். அவரை இழந்து வாடும் முதலமைச்சர் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும், தி.மு.க. வினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

### ரூ.34.60 லட்சம் மதிப்பீட்டில்

# கோவில் புரையூர் மதுரா மோட்டூர் கிராமத்தில் 2 புதிய வகுப்பறை கட்டடங்கள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, பணியை தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 11-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கோவில் புரையூர் ஊராட்சி மதுரா மோட்டூர் கிராமத்தில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ 34.60லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார் ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 34.60 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்துபொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்தார். நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் சிவ சண்முகம், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய பொறியாளர் நாராயணசாமி, ஒன்றிய கவுன்சிலர் காசியம்மாள்கோதண்டம், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பச்சையப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் எஸ்.பி. சம்பத், அரங்கநாதன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் புஷ்ப ஆறுமுகம், முன்னாள் துணைத் தலைவர்கள் சம்பத், சீனு, சண்முகம், நிர்வாகிகள் எஸ். எம். ஏழுமலை, தோப்பு சம்பத், பச்சையப்பன், சீனிவாசன், மணிகண்டன், மூர்த்தி கோவிந்தராஜ், முருகன், சின்னதுரை, விஜயகுமார், காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி பேரூராட்சியில் பருவ மழை காரணமாக மழைநீர் வடிநீர் கால்வாயை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் தன்னுடைய சொந்த செலவில் சுத்தப்படுத்தும் பணியை பார்வையிட்டார். உடன் இரா.அறிவழகன், எம்.கேசவன், இரா.ரமேஷ், அப்துல் கரீம், டி.கே.ராஜா, குப்பன், அர்ஜீனன், சுப்பிரமணியராஜீ, ரமேஷ், தீனதயாளன், பிர்லா பொன்னேரி ஜி.ரவிக்குமார் உள்ளிட்டோர் ஆய்வில் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.10.2024) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ ஆகியோர் சந்தித்து, முரசொலி செல்வம் அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.10.2024) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நடிகர் சத்யராஜ், சந்தித்து, முரசொலி செல்வம் அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (10.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, நடிகர் பிரசாந்த் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும் – அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் – தலைசிறந்த எழுத்தாளர் – பத்திரிகையாளருமான

# முரசொலி செல்வம் மறைவு!

## தலைமைக் கழக அறிவிப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும் - அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் - தலைசிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளருமான திரு.முரசொலி செல்வம் அவர்கள் இன்று (10.10.2024) காலை மறைவெய்தினார்.

கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு கழகத்தின் கொள்கை பரப்பியவரும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றவருமான திரு.முரசொலி செல்வம் அவர்களின் மறைவினையொட்டி தமிழகம் முழுவதும் இன்று (10.10.2024) முதல் மூன்று நாட்களுக்கு கழக அமைப்புகள் அனைத்தும் கழகக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள் : 10.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.